*1996 ஜூலை 26]*

**20—**

**தமிழில் விளம்பரப் பலகை**

***227—டாக்டர் காஞ்சனா கமலநாதன்:**

**திரு. இரா. பெர்னார்டு:**

**திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளம்பரப் பலகையில் தமிழ் இடம் பெற வேண்டும் என்று அரசு ஆணை உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 'Name Board' அல்லது 'Sign Board' என்று சொல்லப்படுகின்ற பெயர்ப் பலகைகளில் தமிழில் இடம் பெறுவதற்கான அரசு ஆணைகள் உள்ளன. ஆனால் 'Hoardings' என்று சொல்லப்படுகின்ற விளம்பரப் பலகைகள் தமிழில் இடம் பெறுவதற்கான அரசு ஆணைகள் எவையும் இல்லை.

(ஆ) தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் சார்பில் 3 அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. 8-8-1977-ல் அரசு ஆணை எண் 585, 29-7-1982-ல் அரசு ஆணை எண் 541, 29-12-1983-ல் அரசு ஆணை எண் 3312 மற்றும் 19-12-1990-இல் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையும் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறையும் இணைந்து அரசு ஆணை எண் 291, வாயிலாக இதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழில் விளம்பரப் பலகை எழுதி வைக்காத தனியார் துறையினர் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படுமா? அடிப்படை எழுத்தறிவும், எண்ணறிவும் அதிகம் பெறாத மக்கள் வாழ்கின்ற நாட்டில் வாகனங்களில் எண்ணிக்கை எழுதும் முறை தற்போதுள்ள நிலையிலேயே தொடர்வது பற்றி அரசு அறிவுறுத்துமா? விளம்பரப் பலகைகளில் பெயர்கள் எழுதப்படுகின்ற போது ஒரு நடைமுறை சிரமம் இருக்கிறது.

[1996 ஜூலை 26

உதாரணத்திற்கு 'ரெடிமேட் ஜூவல்லரி' என்பதைத் தமிழாக்கம் செய்கின்றபோது 'ஆயுத்த அணிகலன் அங்காடி' என்று எழுதினால் அது எளிதாக புரிந்து கொள்ளக்கூடியதாகவும் கேட்பதற்கு இனிமையாகவும் இருக்கிறது.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் 2, 3 துணை வினாக்களைக் கேட்கிறீர்கள். சரி பேசுங்கள்.*

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐஸ் கிரீம் என்பதை பனிக்குழம்பு என்று எழுதுகின்ற போது கொஞ்சம் விளங்கிக் கொள்வது அத்தனை எளிதாக இல்லை. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடைமுறைச் சிரமங்களைத் தவிர்த்து விளம்பரப் பலகைகளை தமிழில் எழுதவேண்டும் என்பதற்கு அரசு அறிவுரை வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தம்முடைய ஆர்வத்தின் காரணமாக வினாக்களை அடுக்கி இருந்தாலும் அனைத்திற்கும் விடை சொல்ல நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் குறிப்பிட்ட பெயர் பலகைகளில் தமிழ் முதலில் இடம் பெற வேண்டும். ஒருவேளை அந்தப் பெயர்ப் பலகை வைத்திருக்கின்ற கடை உரிமையாளர் ஆங்கிலத்திலும் எழுத வேண்டும் என்று விரும்பினால் அதை இரண்டாவது இடத்தில் எழுதலாம். அந்தக் கடையை நடத்துகின்ற உரிமையாளர் தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்றவற்றை தாய்மொழியாக கொண்டவராகவோ அல்லது இந்தியை தாய் மொழியாகக் கொண்டவராகவோ இருந்தாலும் கூட அவரும் தன்னுடைய மொழியில் மூன்றாவதாக எழுதிக்கொள்வதற்கு இந்த ஆணையில் இடம் வகுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இந்த ஆணை பிறப்பிக்கின்றபோது முதலில் தமிழில் இடம் பெற வேண்டும், இரண்டாவது ஆங்கிலத்தில் இடம் பெறவேண்டும், மூன்றாவது பிற மொழிகளில் இடம் பெற வேண்டும் என்றும், தமிழில் எழுதப்படுகின்ற அந்தப் பெயர்ப் பலகை பிற மொழிகளைவிடச் சற்றுப் பெரியதாக இருக்க வேண்டும் என்றும் முதலில் போடப்பட்ட அரசு ஆணையில் *5:3:2* என்ற விகிதத்தில் போடப்பட்டிருக்கிறது. அதே ஆணை சற்று திருத்தம் செய்யப்பட்டு தமிழில் எழுதப்படுகிற பெயர்கள் சற்றுப் பெரியதாக இருக்க வேண்டும். ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும்

*1996 ஜூலை 26*]

வருகிற எழுத்துக்கள் சற்று சிறியதாக இருக்க வேண்டும் என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அண்மையில் நடந்த வணிகர்களுடைய ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அனைவரும் அரசு ஆணைகளை ஏற்றும், அரசினுடைய நோக்கங்களை ஏற்றும் கண்டிப்பாக முழுமையாக எழுதுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளை அவர்களோடு சேர்ந்து பேசி தக்கவாறு களைவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. பொன்னார்டு.

**திரு. இரா. பொன்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலையில் பெயர்ப் பலகைகள் தமிழில் வைக்கப்பட வேண்டும் என்ற அரசு ஆணை இருக்கிறது. அந்த அரசு ஆணையினை நிறைவேற்றுவதை கண்காணிக்க மாவட்டந்தோறும் தமிழில் ஆர்வம் கொண்ட சான்றோர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விளம்பரப் பலகைகளை சரியாக செயற்படுத்துவதற்குரிய பொறுப்பு தொழிலாளர் நலத் துறையில் இருக்கிறது. மாவட்டந்தோறும் தொழிலாளர் நல ஆய்வாளர்கள் அதற்காக இருக்கிறார்கள். ஏற்கெனவே இரண்டு துறைகளும் இணைந்து தான் இதை செயற்படுத்தி வருகின்றன. அந்த அடிப்படையில் மாவட்டந்தோறும் இருக்கின்ற தொழிலாளர் நல ஆய்வாளர்களே நேரடியாகப் பெயர்ப் பலகைகளைக் கண்காணித்து அவர்களை வலியுறுத்தவும் வாய்ப்பு இருக்கிறது; நடவடிக்கை எடுப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. அரசு ஆணைகளை மீறினால் அது தொடர்பாக வழக்குத் தொடர்ந்து நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கும் இந்த அரசு ஆணையில வழி இருக்கிறது. என்றாலும் கூட, நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய மிகையான ஆர்வத்தை ஏற்று வருங்காலத்தில் அப்படித் தேவைப்பட்டால் மாவட்டந்தோறும் தமிழ்ச் சான்றோர்கள், வணிகர்கள் உள்ளிட்ட ஒரு சிறிய குழுவை அமைத்து மேலும் அதை ஊக்குவிப்பது பற்றி அரசு சிந்திக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நிறுவனங்களுக்கு இது பொருந்துகிறது. மிகவும் பிரபலமாக

இருக்கக்கூடிய சன் டி.வி. என்பது ஆங்கிலப் பெயரில் இருக்கிறது. அதை எழு ஞாயிறு என்று மாற்றுவதற்கு (சிரிப்பு) அரசு இந்த நிறுவனத்திற்கு பரிந்துரை செய்யுமா? தமிழில் பேசினான் என்பதற்காக வேப்பேரியில் உள்ள மெட்ரிகுலேஷன் பள்ளியில் 10 ரூபாய் அபராதம் போட்டு அந்தப் பையனை அவமானப்படுத்துகின்ற அளவில் வெயிலில் நிற்க வைத்திருக்கிறார்கள். பவுல் என்ற ஆனந்து என்ற 10 ஆம் வகுப்பு படிக்கின்ற பையனுக்கு நம்முடைய சென்னையில் இது நடந்து இருக்கிறது. இப்படி உள்ள நிலைகளை எல்லாம் நீக்குவதற்கு இன்றையதினம் 26 ஆம் தேதி கூட தமிழ்ச் சான்றோர்கள் சென்னையில் போராட்டம் எல்லாம்கூட நடத்தினார்கள். இதையெல்லாம் தவிர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொன்ன ஒரு கருத்து உண்மையானது அல்ல. தமிழில் பேசியதற்காக ஒரு பள்ளிக்கூடத்தில் மாணவன் தண்டிக்கப்பட்டான் என்பது உண்மை அல்ல. அதற்கான விவரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. வகுப்பறையில் 2, 3 மாணவர்கள் பாடம் நடத்துவதற்கு இடையூறாகப் பேசிக் கொண்டு இருந்ததற்கு ஒரு சிறிய தண்டனை வழங்கப்பட்டதாக திட்டவட்டமாக அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அது தமிழில் பேசியதற்காக அல்ல. இந்தியில் பேசினாலும் தண்டனை உண்டு. வகுப்பறையில் பாடம் நடத்துகின்றபோது ஆங்கிலத்தில் பேசினாலும் தண்டனை உண்டு. அந்த நிறுவனம் தமிழ்ப்பற்றுள்ள ஒரு நிறுவனம்தான் என்பதையும் நான் அறிவேன். ஆகவே, அது உண்மை அல்ல என்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னொன்று சன் டி.வி. ஆங்கிலத்தில் பெயர் இருக்கிறது என்றார்கள். Proper noun என்ற முறைல் சன் டி.வி. பயன்படுத்தப்படுகிறது. அதனாலே அதைத் தமிழிலே சொல்கிறபொழுது 'ச' 'ன்' என்று எழுதி சன் தமிழ் மாலை என்று, சன் என்பதைத் தமிழ் எழுத்துக்களிலே எழுதி, அது ஒரு பெயர்ச் சொல்லாக அமைந்துவிட்ட காரணத்தால் அந்தச் சொல்லினுடைய மொழி பெயர்ப்பை வழங்க முடியவில்லை. ஏனென்றால் அது உலகம் முழுவதும் பலநாடுகளிலே வழங்கப்படக்கூடிய ஒரு பெயர்ச் சொல். எனவே, சன் டி.வி. என்பது, தமிழ் எழுத்துக்களிலேயே சன் டி.வி. என்பதற்கு சன் தொலைக்காட்சி, சன் தமிழ் மாலை என்று வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கேட்ட அந்த முதல் வினாவுக்கு

*1996 ஜூலை 26]*

நம்முடைய அரசு ஆணையிலேயே தெளிவாக சுட்டப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் சொன்னதைப்போல, அது பெயர்ச் சொல்லாக, Proper noun-ஆக இருக்குமானால் அதை மாற்ற வேண்டுமென்ற கட்டாயம் கிடையாது. இந்த அரசாணையிலேயே தெளிவாக இருக்கிறது. எடுத்துக் காட்டாக, ஒரு கடையின் பெயரானது 'ஜெயம் சில்க் ஹவுஸ்' என்று இருக்குமாயின் அதற்கு சரியான, இணையான தமிழ்ச் சொல்லாக, "ஜெயம் பட்டு மாளிகை' என்பதாகவே இருக்கலாம் என்று அரசாணையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கார்களின் எண்களைத் தமிழில் எழுத வேண்டுமென்று ஏதேனும் அரசாணை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லை என்றாலும், தமிழுக்குத் தொடர்பானது என்பதனால் நான் விடையைச் சொல்லிவிடுகிறேன். ஏற்கெனவே அரசியல் சட்டத்தில் எழுத்துக்களும், எண்களும் ஆங்கிலத்தில் தான் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால், அதிலேயே மற்றொரு பிரிவில், ஓர் அரசு விரும்பினால் அதற்கென்று தனியாக ஒரு அறிவிக்கை 'Notification' பிறப்பித்து, அவரவர்களுடைய தாய் மொழிகளில், எட்டாவது அட்டவணையில் எந்தெந்த மொழிகள் இடம் பெற்றிருக்கின்றவோ, இந்திய அளவில் அவற்றில் எந்த மொழியில் வேண்டுமானாலும் எண்களை, எழுத்துக்களை எழுதிக் கொள்ளலாம் என்று ஓர் அறிவிக்கை செய்து கொள்ள முடியும் என்று ஏற்கெனவே சட்டத்தில் இருக்கிறது. அந்த அடிப்படையில் பார்த்தால், மும்பையில் ஓடுகின்ற நகருந்துகளில் அவர்கள் தருகின்ற பயணச் சீட்டுகளில் மராத்தி எண்கள் மட்டுமே இடம் பெற்றிருக்கின்றன. ஆனால், தமிழ்நாட்டில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள், நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் அனைவரும் கலந்து பேசி, வருங்காலத்தில் அவற்றைச் செயல்படுத்துகிறபொழுது முறையான அறிவிக்கை பிறப்பிக்கப் படுகிறபொழுது எண்கள் தொடர்பாய் ஏற்கெனவே இருக்கின்ற உலக எண்களாக, அராபி எண்களாகவே இருக்கலாம். தமிழில் எழுதினால், தமிழ் எண்களைப் பயன்படுத்தினால் அதிலே ஒரு குழப்பம் இருக்கிறது.

'க' என்பது எண்ணாகவும் இருக்கிறது, எழுத்தாகவும் இருக்கிறது; 'அ' என்பது எண்ணாகவும், எழுத்தாகவும், 'ரு' என்பது எண்ணாகவும் எழுத்தாகவும் இருப்பதனாலே குழப்பம் நேரக்கூடாது என்பதனாலே எண்களை அது இப்பொழுது இருக்கிற உலக எண்களிலும், எழுத்துக்களைத் தமிழிலும் எழுதிக் கொள்ளலாம். அதற்கான வகைகளைப் பிற்காலத்தில் அறிவிக்கையாகச் செய்து கொள்ளலாம் என்றுதான் அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத்தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் உள்ள வணிக வளாகங்களில் தமிழில் விளம்பரப் பலகைகள் அமைக்கப்படுகின்றனவா? ஆமெனில், எம்முறையை அவர்கள் கையாள்கிறார்கள்? தொடர்ந்து, தமிழகத்திலுள்ள வணிகர்கள் தமிழில் பெயர்ப் பலகையை வைப்பதை விரும்புகிறார்களா என உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, முதல் கேள்வி, வெளிநாடுகளைப் பற்றியது. ஏற்கெனவே தமிழ் முழுமையாக ஆட்சிமொழியாக இருக்கிற சிங்கப்பூர் போன்ற நாடுகளில், அவர்கள் அரசு மட்டுமல்ல, தனியாரும் தமிழை முழுமையாகப் பயன்படுத்துகிறார்கள். எடுத்துக்காட்டுக்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 76 மாடிகளைக் கொண்ட கட்டிடத்தை உடைய சிங்கப்பூரில் 76-ஆவது மாடியில் முதலில் மலாய் மொழியிலும் இரண்டாவது சீன மொழியிலும், மூன்றாவது தமிழ் மொழியிலும், நான்காவது ஆங்கிலத்திலும் பெயர்ப் பலகைகள் இடம் பெற்றிருக்கின்றன. அதைக்கூட அவர்கள் 76-ஆவது மாடி என்பதை 76-ஆம் அடுக்கு என்று சிறந்த தமிழில் எழுதி வைத்திருக்கிறார்கள். அதேபோல சிங்கப்பூரில் குட்டி இந்தியா என்று பெயர் பெற்ற லிட்டில் இந்தியா என்று பெயர் பெற்ற, சிராங்குன் சாலையில் வணிகர்கள் நல்ல தமிழில் எழுதி வைத்திருக்கிறார்கள். குறிப்பாக நாம் இங்கே நகைக் கடையை, நகைக்கடை என்றுகூட எழுதாமல் ஜூவல்லர்ஸ் என்று அப்படியே எழுதி வைக்கிறோம். ஆனால் சிங்கப்பூரில் இருக்கிற ஒரு தமிழர் மட்டுமல்ல, எல்லாத் தமிழர்களும் நகைக்கடைகளை நகைக் கடை என்று எழுதாமல் "அணிமணிப் பொற்சாலை" என்று எழுதி இருக்கிறார்கள். என் கையிலேயே அதற்கான படமும் இருக்கிறது. இது அவர்கள் வெளியிட்ட நாட்காட்டி எனவே,

*1996 ஜூலை 26*]

அணிமணிப் பொற்சாலை என்று தமிழில் எழுதியது மட்டுமல்ல; ஆங்கிலத்திலும் 'Animani Porchalai' என்றே எழுதியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு அவர்கள் அதைச் சிறப்பாகப் பயன்படுத்துகிறார்கள். அதேபோல பாரிசில் தமிழர்கள் நடத்துகிற கடைகளில் "நகை மாளிகை" என்று அதற்குப் பெயர் வைத்திருக்கிறார்கள். "பேன்சி ஸ்டோர்ஸ்" என்பதற்கும் "பல்பொருள் அங்காடி" என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அதற்கான படமும் இங்கே கையில் இருக்கின்றது. எனவே, வெளிநாட்டில் இருக்கின்ற தமிழர்கள் இதை முறையாகக் கையாளுகிறபோது, தமிழ்நாட்டில் இருக்கிற தமிழர்களும் அதைக் கையாள வேண்டும் என்று நினைப்பதிலும், வற்புறுத்துவதிலும் தவறு ஒன்றுமில்லை. இந்தக் கருத்தைச் சொன்னபோது வணிகர்கள் அனைவரும் எந்தவகையான மறுப்பும் இன்றி, எந்தவகையான எதிர்ப்பும் இன்றி, 'அரசினுடைய கருத்துக்கு நாங்கள் முழுமையாக உடன்படுகிறோம், கண்டிப்பாகச் செயல்படுத்துகிறோம்' என்று சொல்லியிருக்கிறார்கள்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் உலகம் முழுவதும் சுற்றியிருப்பது நன்றாகத் தெரிகின்றது. (சிரிப்பு)

வினா எண் 21, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு இந்து சமய அறநிலைத் துறை அமைச்சர்.

**21—**

**அப்பச்சிமார் மடம் கோவிலை அரசு எடுத்துக்கொள்ளுதல்.**

*** 290—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், பெருந்துறை ஒன்றியம், திங்களூர் அருகிலுள்ள அப்பச்சிமார் மடம் என்ற கோவிலை அரசு எடுத்துக் கொள்ளும் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.